ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1940/20 - 2015 නොවැම්බර් මස 11 වැනි බදාදා - 2015.11.11

*1940/20 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் மாத்தறை மாநகர சபையின் தலைவர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

கேட்டு விலகிக் கொண்டதன் காரணமாக மாத்தறை மாநகர சபையின் மாநகர சபைத் தலைவர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 65அ (1) என்னும் பிரிவின் கீழ் மாநகர சபைத் தலைவர் பதவி வகித்த ஹந்துன்கே சொசிந்திர நந்தன என்பவர் அங்கத்துவம் வகித்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலக்கெடுவுக்குள் நகர சபைத் தலைவர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான மாத்தறை மாநகர சபையின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கு திரு. தீகொட கமகே யசரத்ன என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது மாத்தறை மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் வேவெல்வல ஹேவகே ரவீந்திர விஜயகுமார ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. தீகொட கமகே யசரத்ன என்பவர் மாத்தறை மாநகர சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

டபிள்யூ. எச். ஆர். விஜயகுமார,<br>
தெரிவத்தாட்சி அலுவலர்,<br>
மாத்தறை மாநகர சபை.

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*<br>
*மாத்தறை,*<br>
*2015, நவெம்பர் 11.*

*11 - 732*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*